யுத்தக்குதிரை ஊழியங்கள்

BATTLE HORSE MINISTRIES

January, 2026

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே...

துதி, கனம், மகிமை எல்லாம் தேவனுக்கே. கடந்த மாதத்தில் எத்தனையோ கஷ்டமான சூழ்நிலைகள், எத்தனையோ பிரச்சனைகள் இருந்த போதிலும் நம்மை விஷேசமாய் காத்து வழிநடத்திய தேவனுக்கு நன்றி கூறுவோம். இந்த மாதத்தைக் காணக்கூடிய கிருபையை நமக்கு அளித்தார். தேவனுக்குள் வளர இந்த மாதத்தில் நீங்கள் எடுத்திருக்கும் தீர்மானங்கள் அனைத்தும் நிறைவேற எல்லாம் வல்ல இறைவனிடம் ஜெபிப்போம். இந்த மாதத்திலும் இந்த இதழை நிறைவு செய்து அனுப்ப உதவி செய்தார் அதற்கு நன்றி கூறுகிறேன். இந்த இதழின் செய்திகளும், கதைகளும் உங்களோடு கூட பேசும் உங்களுக்கு உபயோகமாக இருக்கும் என்று விசுவாசிக்கிறேன்.

ஜெபம்

அன்புள்ள தகப்பனே, கடந்த மாதத்தில் எங்களை ஒரு குறைவுமின்றி காத்து வழிநடத்தினீர், நன்றி கூறுகிறோம் ராஜா.இந்த மாதத்தில் எங்கள் மூலம் அனேக ஆத்துமாக்கள் சந்திக்கும்படியான சூழ்நிலைகளை எங்களுக்குத் தாரும். ஆட்சியாளர்கள், அரசு அதிகாரிகள், மருத்துவர்கள், செவிலியர்கள், ஆசிரியர்கள், காவல்துறை அதிகாரிகள், தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும் பாதுகாத்து ஆசீர்வதிக்கும்படியாக ஜெபிக்கிறோம் தகப்பனே. இந்த புதிய மாதத்திலும் எங்களுடைய தேவைகள் சந்திக்கப்பட்டு, கவலைகள், துக்கங்கள் தீர்ந்து, எப்பொழுதும் மகிழ்ச்சியாக இருக்கும்படியான வாழ்க்கையைத் தரும்படியாக இரட்சகராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், இந்த மாத செய்திகள், கதைகள் அனைத்தும் வாசிக்கின்ற ஒவ்வொருவருக்கும் பிரயோஜனமாக இருக்கும்படியாக அமைய ஜெபிக்கிறோம். ஜெபம் கேளும் நல்ல தகப்பனே.

ஆமென்.

காணாத மனம் மாறுதல்

ஒருவனும் வேசிக்கள்ளனாகவும், ஒருவேளைப் போஜனத்துக்காகத் தன் சேஷ்டபுத்திரபாகத்தை விற்றுப்போட்ட ஏசாவைப்போலச் சீர்கெட்டவனாகவும் இராதபடிக்கும் எச்சரிக்கையாயிருங்கள்.

ஏனென்றால், பிற்பாடு அவன் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக்கொள்ள விரும்பியும் ஆகாதவனென்று தள்ளப்பட்டதை அறிவீர்கள்; அவன் கண்ணீர்விட்டு, கவலையோடே தேடியும் மனம் மாறுதலைக் காணாமற்போனான். எபிரெயர் 12:16,17

இந்த வசனத்தில், ஏசா கண்ணீர் விட்டு, கவலையோடு தேடியும் மனம் மாறுதலை காணவில்லை என்று பார்க்கிறோம். ஏன் கண்ணீர் விட்டு கவலையோடு இருந்தார், அப்படி இருக்க என்ன காரணம் என்று பார்த்தால் ஆதி 25:28-34 இருக்கிற சம்பவத்தைப் பார்க்கிறோம். பசியோடு களைப்போடு இருந்த ஏசா யாக்கோபிடம் சாப்பிட கூழ் கேட்கிறார். அப்போது இந்த சிவப்பான கூழ் வேண்டுமென்றால் உன்னுடைய சேஷ்ட புத்திரபாகத்தை

எனக்கு கொடு என்று கேட்கிறார். அதற்கு ஏசா, இதோ, நான் சாகப்போகிறேனே; இந்தச் சேஷ்ட புத்திர பாகம் எனக்கு என்னத்திற்கு என்றான். (ஆதி. 25:32)

ஏசாவுக்கும் பசி. யாக்கோபுக்கும் பசி. யாக்கோபு தன் பசியை ஆற்றும்படி அப்பம் சுட்டு, பயற்றங்கூழை ஆயத்தம் பண்ணிக்கொண்டிருந்தார். ஏசா தன் சேஷ்ட புத்திர பாகத்தை அலட்சியம் செய்ததற்கு, தன்னுடைய பசியையே சாக்காகக் கூறினார். "பசியினால் நான் சாகப்போகிறேனே" என்றார்.

எதைத் தெரிந்துகொள்வது? சேஷ்ட புத்திர பாகத்தையா? அல்லது ஒருவேளை வயிறார உண்ணும் உணவையா? அன்றைக்கு ஈசாக்கின் மூத்த குமாரனாகிய ஏசா, அப்பத்தையும், பயற்றங் கூழையுமே, தெரிந்துகொண்டார். சேஷ்ட புத்திர பாகத்தையோ, அசட்டைப் பண்ணினார். "இதோ, நான் சாகப்போகிறேனே. இந்தச் சேஷ்ட புத்திர பாகம் எனக்கு என்னத்திற்கு?" என்றார்.

சேஷ்ட புத்திர பாகம் என்றால் என்ன? சேஷ்ட புத்திர பாகம் என்பது

பழங்காலத்தில், குறிப்பாக விவிலிய மரபுகளில், மூத்த மகனுக்குக் கிடைக்கும் சொத்து மற்றும் குடும்பத் தலைமைப் பொறுப்பில் உள்ள சிறப்புப் பங்கைக் குறிக்கிறது; இது வெறும் சொத்து மட்டுமல்லாமல், ஒரு குடும்பத்தின் எதிர்காலத்திற்கான முக்கியத்துவத்தையும், ஆசீர்வாதத்தையும் குறிக்கிறது, ஏசாவைப் போல இதைப் புறக்கணிப்பவர்களுக்கு இழப்பு ஏற்படும் என வலியுறுத்துகிறது.

முக்கிய அம்சங்கள்:

முன்னுரிமை: முதற்பேறான பிள்ளைக்குக் கிடைக்கும் சிறப்புரிமை.

குடும்பத் தலைமை: தகப்பனின் மரணத்திற்குப் பிறகு, குடும்பத்தின் பொறுப்பை ஏற்றுக்கொள்வது.

ஆஸ்திப் பங்கு: சொத்தில் இரட்டிப்புப் பங்கு அல்லது சிறப்பான பங்கு.

இத்தனை பெரிய ஆசீர்வாதத்தை ஒரு வேளை உணவிற்காக அலட்சியம் செய்த ஏசாவினால் எவ்வளவு முயற்சித்தும் மீண்டும் பெறமுடியவில்லை என்று பார்க்கிறோம்.

அதேபோல தான் இன்றைய சூழலிலும் நாம் ஒரு சில சிறிய காரணங்களுக்காக சில நிமிட சந்தோஷத்திற்காக, நிம்மதிக்காக பாவமான காரியங்களை செய்து தேவனுடைய இரட்சிப்பை இழந்துபோகிறோமே?

இப்பொழுதே சிந்திப்போம், பாவத்தை விட்டு விலகுவோம், தேவனுடைய கிருபையை காத்துக்கொள்வோம்.

ஆமென்.

எதுங்க ஸ்பெஷல்?

கொஞ்ச நாளைக்கு முன்னாடி, நான் வேலைக்கு போற வழியில ஒரு பறவைய பாத்தேன். அத பாத்ததும் எனக்கு முகத்துல ஒரு சிரிப்பு வந்துச்சு. அது ஏதோ பெருசா செஞ்சுதுனு இல்ல, அது எனக்கு பழக்கப்பட்ட பறவை இல்லங்குறதுனால தான் அந்த சிரிப்பு. அந்த புது பறவைய (கடற்பறவை - Seagull) பாக்குற மும்முரத்துல, நான் எப்பவும் பாக்குற காக்காவ (Crow) பெருசா கண்டுக்கல.

அந்த புது பறவைய பத்தி தெரிஞ்சுக்கணுங்கற ஆர்வத்துல கூகுள் பண்ணி பாத்தேன். அப்போ தான் தெரிஞ்சுது, அது சீசனுக்கு வர்ற பறவைனும்,

வழக்கமா குளிர்காலத்துல தான் வரும்னும். இன்னும் அத பத்தி படிக்கும்போது ஒரு விஷயம் ஆச்சரியமா இருந்துச்சு - அதுங்க உப்பு தண்ணிய குடிச்சா கூட ஒன்னும் ஆகாதாம், கடவுள் அந்த மாதிரி ஒரு உடலமைப்ப அதுங்களுக்கு கொடுத்திருக்காரு. இத படிச்சப்போ, "அப்போ இது ரொம்ப புத்திசாலியான பறவையா இருக்குமோ"னு நெனச்சு தேடிப் பாத்தேன். ஆனா பாருங்க, அந்த லிஸ்ட்ல நம்ம காக்கா தான் "டாப்"ல இருந்துச்சு! நான் எத சாதாரணமா நெனச்சு கண்டுக்காம விட்டேனோ, அது தான் மத்தத விட புத்திசாலினு தெரிஞ்சப்போ எனக்கு சிரிப்பு வந்துச்சு.

நம்ம எல்லார்கிட்டயும் கூட ஏதாவது ஒரு ஸ்பெஷலான விஷயம் கண்டிப்பா இருக்குங்க. ஆனா நாம அத பெருசா கண்டுக்கறதே இல்ல. இன்னும் மோசம் என்னனா, மத்தவங்க கூட நம்மள ஒப்பிட்டு பாத்துட்டு, "நம்மகிட்ட எந்த திறமையும் இல்லையே"னு சோர்ந்து போய் உக்காந்துர்றோம். ஆனா நமக்கு ரொம்ப பழக்கப்பட்ட அந்த பைபிள் வசனத்த மறந்துர்றோம்:

"பின்பு தேவன்: நமது சாயலாகவும் நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக..." - ஆதியாகமம் 1:26

ஒவ்வொருத்தரும் ஒவ்வொரு விதத்துல ஸ்பெஷல் தான். திறமையே இல்லாத ஆளுனு யாருமே இல்ல. பறவைகளுக்கே அதுங்க வாழ்றதுக்கு ஏத்த மாதிரி திறமை இருக்கும்போது, கடவுள் கண்ணுக்கு நாம அதவிட எவ்ளோ ஒசத்தி? நாம லைஃப்ல முன்னேறவும், கடவுளுக்கு மகிமை சேக்கவும், நம் ஒவ்வொருத்தருக்கும் ஒரு தனி திறமைய வச்சு தான் கடவுள் படைச்சிருக்காரு.

அதனால, நம்மள கடவுள்கிட்ட ஒப்படைப்போம். நம்ம லைஃப்ல அவரோட வழிநடத்துதல கேட்போம். நமக்குள்ள இருக்குற அந்த "ஸ்பெஷல்" என்னனு கண்டுபிடிச்சு, அத கடவுளோட மகிமைக்காக பயன்படுத்துவோம்.

ஜெபம்:

அன்புள்ள தகப்பனே, எங்களை உமது சாயலாகவும், மிகவும் நேர்த்தியாகவும் படைத்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

ஆண்டவரே, பல நேரங்களில் நாங்கள் மற்றவர்களுடைய திறமைகளைப் பார்த்து வியக்கிறோம்; ஆனால் எங்களுக்குள் நீர் வைத்திருக்கும் சிறப்பான குணங்களையும், தாலந்துகளையும் மறந்துவிடுகிறோம். மற்றவர்களோடு எங்களை ஒப்பிட்டு, எங்களை நாங்களே தாழ்த்திக் கொள்ளாதபடி எங்கள் மனதைக் காத்துக்கொள்ளும்.

எப்படி ஒவ்வொரு பறவைக்கும் ஒரு தனித்துவமான திறமையைக் கொடுத்திருக்கிறீரோ, அதேபோல எனக்கும் ஒரு நோக்கத்தையும், சிறப்பான திறமையையும் கொடுத்திருக்கிறீர் என்பதை நான் உணர எனக்கு உதவி செய்யும். எனக்குள் இருக்கும் அந்த "ஸ்பெஷல்" என்ன என்பதை நான் கண்டறிந்து, அதை என்னுடைய சுய பெருமைக்காக அல்லாமல், உமது மகிமைக்காக மட்டுமே பயன்படுத்த என்னை ஒப்புக்கொடுக்கிறேன்.

நீரே என்னை வழிநடத்தும். இயேசுவின் நாமத்தில் ஜெபிக்கிறோம், எங்கள் நல்ல பிதாவே, ஆமென்.

வேதாகம போட்டி 076

(2 பேதுரு 1-3, சங்கீதம் 126–130)

1.யார் கர்த்தரால் வரும் சுதந்தரம்? யார் அவரால் கிடைக்கும் பலன்?

2.கர்த்தருக்கு பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எப்படி இருப்பான்?

3.நீதியுள்ளவர் கயிறுகளை அவர் அறுத்தார்

4.காத்திருக்கிறேன்; காத்திருக்கிறது;நம்பியிருக்கிறேன்.

5.எப்பொழுது சொப்பனம் காண்கிறவர்களை போல இருந்தோம்?

6.எதனோடு இச்சையடக்கத்தையும், எதனோடு பொறுமையையும் கூட்டி வழங்கவேண்டும்?

7. பொருத்துக

a.நோவா	**1.நீதிமான்**
b.லோத்து	**2.வேதபுரட்டுகள்**
c.கள்ளப்போதகர்கள்	**3.நீதியைப் பிரசங்கித்தவன்**

8.மெய்யான பழமொழிகள் என்று சொல்லப்பட்டவை எவை?

9.கர்த்தர் ஏன் நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்?

10.இவைகள் வரக்காத்திருக்கிற நாம் எப்படி ஜாக்கிரதையாயிருங்கள்?

விடைகளை அடுத்த மாதம் **9**-ம் தேதிக்குள் **(9th February 2026)**

+91 7092 470757 என்ற Whatsapp எண்ணிற்கு அனுப்பவும்.

வேதாகம விடுகதைகள்:

எழுத்துக்களை வரிசைப்படுத்தி சரியான சொற்களைக் கண்டுபிடிக்கவும்:

1. தி ர சே ட பு த் க ம் பா ஷ்

2. ஷ ண தூ ம்

3. தி ர் கீ த்

4. கி யோ லே ன்

5. ல ம் ப ம் சி

6. தி ச டி

7. க வ சே ம்

8. கா க் கி ரா ண க் உ ர ன்

9.ம ர ம் மி ன ய ம்

10. சீ லை த ரா ச்

வேதாகம விடுகதைக்கான விடை அனுப்பியவர்கள்

1) **Sis.மேரி செல்வராஜ், சென்னை**
2) **Sis. ஸ்டெல்லா ராணி தேவஅருள் ஞானமணி, விசுவாசபுரம்.**
3) **Sis. காந்திமதி வேலூர்**

வேதாகம போட்டி 075 சரியான விடை அனுப்பியவர்கள்

1) **Sis. மேரி செல்வராஜ், சென்னை.**
2) **Sis. ராகேல் ஜெயப்பழம் விசுவாசபுரம்**
3) **Sis. ஸ்டெல்லா ராணி தேவஅருள் ஞானமணி, விசுவாசபுரம்.**
4) **Sis. ரெஜினா மேரி, கோயம்புத்தூர்.**
5) **Sis. சுகந்தி, தூத்துக்குடி.**
6) **Sis. காந்திமதி வேலூர்**
7) **Sis. பெசல்யா, மும்பை.**
8) **Sis. ரமணி தேவி துரைசிங், போரூர்.**
9) **Sis. ஜெயபாக்கியம், மெஞ்ஞானபுரம்.**
10) **Sis. ஜென்சி, மெஞ்ஞானபுரம்.**
11) **Sis. காயத்ரி லாரன்ஸ், ஈரோடு.**
12) **Sis. ரஜூலா டேவிட், சென்னை**

யுத்தக்குதிரை மாத இதழுக்கு விடை அனுப்பியமைக்கு நன்றி.தொடர்ந்து வாசிக்கவும். விடை அனுப்பவும். தேவன்தாமே உங்களையும் உங்கள் குடும்பத்தையும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

பொதுவான சில ஜெபக்குறிப்புகள்:

- நம்முடைய தேச தலைவர்களுக்காக, தேசத்தின் நலனுக்காக ஜெபிப்போம்.
- இந்திய தேசம் இன்னும் அதிகமாக இயேசு கிறிஸ்துவை அறிய, சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ள ஜெபிப்போம்.
- ஒவ்வொரு சபை ஊழியர்கள், போதகர்கள், மிஷினரிகளுக்காக ஜெபிப்போம்.
- மருத்துவத்துறை, காவல் துறை, துப்புரவுத்துறை, கல்வித் துறையில் இருப்பவர்களுக்காகவும்,

அவர்களுடைய பாதுகாப்பிற்காகவும் ஜெபிப்போம்.

- ❖ பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் குறைய, பெண்களுடைய பாதுகாப்பிற்காக பாரத்தோடு ஜெபிப்போம்.
- ❖ போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி இருப்பவர்கள், அதில் இருந்து விடுதலை பெற ஜெபிப்போம்.
- ❖ கேன்சர், எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டோருக்காகவும், அவர்களுடைய குடும்பத்திற்காகவும் ஜெபிப்போம்.
- ❖ கண் பார்வை குறைவுபட்டோர், காது கேட்கும் திறன் பாதிக்கப்பட்டோர், வாய் பேச முடியாதவர்கள், கை, கால்கள் பெலகீனப்பட்டவர்களுக்காக ஜெபிப்போம்.
- ❖ விசுவாசிகள் இன்னும் கர்த்தரில் வளர ஜெபிப்போம், கர்த்தரை விட்டு பின்மாறி போய்விடாதபடிக்கு பாரத்தோடு ஜெபிப்போம்.
- ❖ மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் பாதுகாப்பிற்காக ஜெபிப்போம்.
- ❖ படிக்கின்ற பிள்ளைகளுக்காக, போட்டித் தேர்வுகளுக்கு தயாராகிற மாணவர்களுக்காக, வேலைக்கு செல்பவர்களுக்காக, வேலை தேடுபவர்களுக்காக ஜெபிப்போம்.
- ❖ திருமண காரியங்களுக்கு காத்திருப்பவர்களுக்காக ஜெபிப்போம். குழந்தை இல்லாதவர்களுக்கு கர்ப்பத்தின் கனி சீக்கிரமாக கிடைக்க அதிக பாரத்தோடு ஜெபிப்போம்.
- ❖ கருணை இல்லங்கள், அநாதை இல்லங்களில் இருக்கின்ற ஒவ்வொருவருக்காகவும் ஜெபிப்போம்

- முதியவயதில் இருக்கின்றவர்களுக்காகவும், அவர்களுடைய உடல்நலத்திற்காகவும் ஜெபிப்போம்.

இந்த PDF வாசித்த உங்கள் ஒவ்வொருவரையும் தேவாதி தேவன் ஆசீர்வதிப்பாராக. இந்த மாதத்தின் செய்திகளும், வேதாகம சிந்தனைகளும் உங்களுக்கு மிகவும் பயனுள்ளதாய் இருந்திருக்கும் என நம்புகிறேன். இந்த சிறிய பணி எல்லா மாதமும் தொடர எனக்காக ஜெபிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தொடர்புக்கு: +91 7092 470757 என்ற Whatsapp எண்ணில் தொடர்பு கொள்ளவும்.